[6 வயது பிள்ளைகளுக்காக எழுதப்பட்டது]





# சிங்கக் கெபியிலே தானியேல்



பெர்சியவின் இராஜாவாகிய கோரேஸ் பாபிலோனை வீழ்த்தி கைப்பற்றின பின்பு, தரியு என்ற பெயர் கொண்ட இராஜா தன்னுடைய இராஜ்யத்தை ஆளும்படி நூற்றிருபது தேசாதிபதிகளை நியமித்தான். இவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளையும் ஏற்படுத்தினான். இந்த மூன்று பிரதானிகளில் மிக முக்கியமானவர் நேபுகாத்நேச்சாருக்கு ஆலோசனைகாரனாக இருந்த தானியேல் ஆவார். பாபிலோனின் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இறந்த பின்னர், அவனின் பிள்ளைகள் தானியேலை மறந்தனர்.

மேதிய-பெர்சிய இராஜாவான தரியு அனைத்து தேசாதிபதிகள் மற்றும் பிரதானிகளை விட தானியேலை மிகவும் நேசித்தான். இதனால் தேசாதிபதிகளும் பிரதானிகளும் மிகவும் பொறாமைக் கொண்டு, தரியு இராஜா தானியேலை வெறுக்கும்படி, அவரின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும்படி பல குறுக்கு வழிகளை மேற்கொண்டனர். பல தீய காரியங்களை செய்தாலும் அவர்களால் தானியேல் மீது எந்த தவறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தானியேல் எப்போதும் கவனமாகவும புத்திசலியாகவும் இருந்து எல்லாவற்றிலும் எப்போதும் சிறப்பாக செயல்பட்டார். பொறாமை கொண்ட அந்த தலைவர்கள் ஒரே ஒரு விஷயத்தில்

மட்டும் தான் தானியேல் மீது குற்றம் கண்டுபிடிக்க முடியும் என்பதை தெரிந்து கொண்டார்கள். இஸ்ரேயலின் தேவனை தானியேல் வழிப்படுவதை இந்த உலகத்தின் எந்த சக்தியாலும் நிறுத்த முடியாது என்பதை நன்கு தெரிந்து கொண்டார்கள். தானியேலின் எதிரிகள் ஒரு புதிய திட்டத்தை தீட்டினார்கள். பின்பு அந்த பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி தரியு இராஜாவினிடத்தில் சென்று, அவனை நோக்கி: "தரியு இராஜாவே, நீர் என்றும் வாழ்க. எவனாகியும் முப்பது நாள் வரையில் ராஜாவாகிய உம்மைத் தவிர எந்தத் தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி: யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட இராஜா கட்டளை பிறப்பித்து உறுதியான தாக்கீது செய்ய வேண்டுமென்று இராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும் தேசாதிபதிகளும் மந்திரிமார்களும் தலைவர்களும் ஆலோசனை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த கட்டளை மாற்றப்படாதபடி நீர் அதில் கையெழுத்திட வேண்டும்" என்று கூறினார்கள். மனமேட்டின்மையால் தரியு இராஜா கையெழுத்திட்டான்.



தினமும் தானியேல் மூன்று வேளை தேவனை வணங்கி வந்தார். இந்த கட்டளையை பற்றி தானியேல் கேட்டப்பொழுது தன்னுடைய வீட்டிற்கு சென்று எருசலேமை

நோக்கி இருந்த ஜன்னல்களை திறந்து, முழங்காற்படியிட்டு ஜெபம் செய்து எப்போதும் வேண்டுவது போல் தேவனுக்கு நன்றி தெரிவித்தார்.



தானியேலை பிடிப்பதற்காக தருணத்தை எதிர்பார்த்திருந்த அவருடைய எதிரிகள், அவர் ஜெபம் செய்வதை கண்டு, தரியு இராஜாவிடம் சென்று அவனை நோக்கி: "இந்த கட்டளையை மதிக்காத யாவரும் சிங்கக் கெபியிலே போடப்படுவார்கள் என்று நீவிர் கையெழுத்திட்டு உள்ளிரே" என்று கூறினார்கள். அதற்கு இராஜா "உண்மைதான். இந்தக் கட்டளையை மாற்ற முடியாது. என்னாலும் இவற்றை மாற்ற முடியாது" என்று கூறினான்.

"ஆனாலும் தானியேல் இந்த கட்டளையை நிராகரித்து தன்னுடைய இஸ்ரேயலின் தேவனிடம் தினமும் மூன்று வேளை ஜெபம் செய்து வருகிறார்."




இந்த செய்தியை கேட்டவுடன் தரியு இராஜா மிகவும் வருத்தப்பட்டு, தன்னுடைய மனமேட்டிமையால் தான் செய்ததை நினைத்து விசனப்பட்டான். தன் மீதே கோபம் கொண்டவனாக, தானியேலை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் மேதிய பெர்சிய சட்ட புத்தகங்களில் ஏதாவது கிடைக்குமா என்று இரவு முழுவதும் தேடினான்.

மீண்டும் கூட்டங்கள் கூடின. தேசாதிபதிகளும் பிரதானிகளும் இராஜாவிடம் சென்று அவனுக்கு நினைவுபடுத்தும் விதமாக: "இராஜாவே, மேதிய பெர்சிய சட்டங்களை இராஜா உட்பட வேறு யாரும் மாற்றமுடியாது" என்று கூறினார்கள்.

அப்போது இராஜா கட்டளையிட, அவர்கள் தானியேலைக் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். இதை செய்த பின்பு, இராஜா தானியேலை நோக்கி : "நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை தப்புவிப்பார்" என்று கூறினான். ஒரு கல் கெபியினுடைய வாசலின் மேல் வைக்கப்பட்டது. யாரும் திறக்காதபடி தன் மோதிரத்தினாலும் தன் பிரபுக்களின் மோதிரத்தினாலும் அதின் மேல் முத்திரை போட்டான்.



இதன் பின்பு தரியு இராஜா தன் அரண்மனைக்கு சென்று இரவு முழுவதும் தூங்காமலும், சாப்பிடாமலும், தன்னுடைய கவலைகளை மறக்க வைக்கும் கீதவாக்கியங்களை கேளாமலும் இருந்தான். விடியற்காலமானதால் சிங்கங்களின் கெபி அருகே வந்து "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே சிங்கங்களிடமிருந்து காப்பாற்றப்பட்டாயா?"என்று கேட்டான்.



பின்பு சிங்கக் கெபியிலிருந்து தானியேல் பேசுகையில் "இராஜாவே நீர் என்றும் வாழ்க. சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு, தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார். நான் குற்றமற்றவனாயும் யாருக்கும் எந்த தீங்கும் செய்யாததால் அவை என்னை ஒன்றும் செய்யவில்லை" என்றார்.

இதனால் மிகவும் சந்தோஷமடைந்த தரியு இராஜா சிங்கக்கெபியில் இருந்து தானியேலை வெளியே கொண்டுவரும்படி ஆணையிட்டான். தானியேல் மீது எந்த காயமும் இல்லை. தேவன் தானியேலை விடுதலை செய்தார் என்றும் தானியேலின் எதிரிகள் தேவனுக்கு பகைஞர்கள் என்று இராஜா அறிந்து கொண்டான். தன்னை தந்திரமாக வசப்படுத்தி தப்பான ஒரு சட்டத்தை கையொப்பமிட செய்த எல்லோரையும் சிங்க கெபியிலே போட கட்டளையிட்டான். சிங்கங்கள் அவர்களை தின்றன.

தான் ஆட்சி புரியும் அனைத்து மக்களுக்காகவும் ஒரு சட்டத்தை தரியு இராஜா கொண்டு வந்தான். தானியேலின் தேவனுக்கு முன்பாக அனைவரும்

நடுங்கிப் பயப்படவேண்டுமென்று கட்டளையிட்டான். ஏனெனில் அவர் ஜீவனுள்ள தேவன், என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர், அவருடைய ராஜ்யம் அழியாதது. அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தமும் நிற்கும். அவர் தப்பவிக்கிறவரும், இரட்சிக்கிறவருமாயிருக்கிறார். அவர் அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்கிறவர். சிங்கங்களிடம் இருந்து தானியேலை காப்பாற்றினார்.

தரியுவின் இராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய இராஜ்யத்திலும் தானியேல் மிகவும் விருத்தியடைந்தான்.

## [இந்த கதையை பற்றி தானியேல் 6:1-28-ல் காணலாம்]